தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.02.2026

## திருத்தப்பட்ட ஆணை நாள்.07.08.2026

## முன்னிலை

**திரு. வி.பி,ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.NC 1542/A/2023 (SA 13188/A/2022)**

**திரு ஆ. துரைசாமி** -- மனுதாரர்

*/எதிர்/*

**பொதுத் தகவல் அலுவலர் /**
**கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்,**
**கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம்,** -- பொது அதிகார அமைப்பு
**ஆத்தூர் சரகம்,**
**சேலம் மாவட்டம் - 636 108**

## திருத்தப்பட்ட ஆணை

மேற்கண்ட வழக்கு எண்.NC 1542/A/2023 (SA 13188/A/2022)-ல் ஏற்கனவே 12.02.2026 நாளிட்டு வெளியிடப்பட்ட ஆணையினை திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் உத்தரவிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட வழக்கு எண் SA13188/2022 ஏற்கனவே 01.08.2023 நாளன்று இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அன்றைய விசாரணையில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை பதினைந்து தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர் ஆணையத்தின் ஆணை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்து, 06.11.2023 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.02.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு ஆ. துரைசாமி அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. ஆ. ரம்யா, பொதுத் தகவல் அலுவலர்/கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், ஆத்தூர் சரகம், ஆத்தூர், சேலம் மாவட்டம் அவர்கள நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 22.02.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரரினுடைய பணிப்பதிவடு நகல்

01.12.1975 முதல் 31.03.2011 வரை உள்ள ஆவணங்களின் நகல் போன்ற 3 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 22.03.2022 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக அளித்த தகவலில் திருப்தி அடையாத காரணத்தால் மனுதாரர், 07.04.2022 நாளிட்ட தனது முதலாம் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் பிரிவு 19(3)இன் கீழ் 21.07.2022 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.08.2023 அன்று இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அன்றைய விசாரணையில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை பதினைந்து தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர் ஆணையத்தின் ஆணை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்து, 06.11.2023 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.02.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், 05.10.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் அளித்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து அக்கடிதத்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறதியளித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, இவ்வாணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- *மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 அனுமதித்திருக்கும் 30 நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (Violation of the Act) இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும் பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காமல் இருப்பதற்கு ஏற்புடைய அல்லது நியாயமற்ற தாமதத்தை (Unreasonable delay) இவ்வாணையத்தின் விசாரணையில் நிருபிக்காத காரணத்தாலும் பொதுத் தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005இன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்காமல் தவறான மற்றும் திசைதிருப்பும் நோக்கில் தகவல் வழங்கியுள்ளதாலும்,( Providing False and Misleading information / Incomplete Information) மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடுசெய்யும்பொருட்டு பொது அதிகார அமைப்பு மீது நடவடிக்கை மேற்கொள்ளவும். உரிய நஷ்டஈடு வழங்க வேண்டியும் ஆணையத்தின் விசாரணையில் தெரிவித்தன் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்று, மேற்படி தகவல்கள் வழங்காததால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல்*

*அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கவும். மனுதாரர் தொகையினை மேற்படி பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 20.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு. தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்குரிய தகவல்களை உரிய காலத்திற்குள் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 20.08.2026 அன்று முற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடுகின்றது*
- *மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனம் 2க்கான முழுமையான தகவல்களை இணைப்பதிவாளர், ஆத்தூர், சேலம் அவர்கள் தகவலைப் பெற்றுத் தரும் நோக்கில் உரிய விசாரணை மேற்கொண்டு உரிய ஆவண நகல்களுடன் “தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 20.08.2026 அன்று முற்பகல் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் இணைப்பதிவாளர் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

**(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்.**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.NC 1542/A/2023 (SA 13188/A/2022)**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
**பொதுத் தகவல் அலுவலர் /**
**கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்,**
**கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம்,**
**ஆத்தூர் சரகம்,**
**சேலம் மாவட்டம் - 636 108**

**மனுதாரர்**
**திரு. ஆ. துரைசாமி**
**56, காட்டுகொட்டாய்,**
**கொண்டையம்பள்ளி அஞ்சல்,**

**கெங்கவல்லி வட்டம்**
**சேலம் - 636 110**

**RA/PC 07.08.2026**